# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை-காஞ்சிபுரம் மாவட்டம்

(15.06.2016 முதல் 19.06.2016 வரை)

**கடந்த நான்கு நாட்களில் நிலவிய வானிலை (10.06.2016 முதல் 13.06.2016)**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த நான்கு நாட்களாக வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்பட்டது. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 37.0-38.0℃ மற்றும் 27.0-29.0℃ என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 44 முதல் 60 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 8-15 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 15.06.2016 | 16.06.2016 | 17.06.2016 | 18.06.2016 | 19.06.2016 |
|---|---|---|---|---|---|
| மேகமூட்டம் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் |
| மழை பொழிவு (மி.மீ) | 2 | 2 | 0 | 2 | 2 |
| காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு | 10 | 10 | 10 | 10 | 10 |
| காற்று வரும் திசை | வடக்கு | வடக்கு | வடக்கு | வடக்கு | வடக்கு |
| வெப்பநிலை°C | | | | | |
| அதிகபட்ச வெப்பநிலை°C | 38 | 38 | 38 | 38 | 38 |
| குறைந்த பட்ச வெப்பநிலை°C | 28 | 28 | 28 | 28 | 28 |
| ஈரப்பதம் | 45-52 | 45-52 | 45-52 | 45-52 | 45-52 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. 15.06.2016 , 16.06.2016 , 18.06.2016 மற்றும் 19.06.2016 ஆகிய நாட்களுக்கு இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.
2. கொட்டகையின் மேற் பகுதியில் வைக்கோல் அல்லது தென்னாங்கித்து பரப்புவதன் மூலம் வெப்ப தாக்கத்தின் அளவை குறைத்து கொட்டகையின் உட்புறம் குளுமையாக வைத்து கொள்ளலாம்.
3. செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
4. உழவர்கள் தங்களுடைய கோழிப் பண்ணைகளில் வெயில் அதிகமாக இருக்கும் பகல் நேரத்தில் திவனம் அளிக்காமால் குளிர்ந்த குடிநீர் அளிப்பதன் மூலம் வெப்பத்தக்கத்திலிருந்து கோழிகளை பாதுகாக்கலாம்.
5. உழவர்கள் கறவை மாடுகளில் வெப்பத்தின் தாக்கத்தை குறைக்க வெயில் அதிகமாக இருக்கும் நேரத்தில் இரண்டு அல்லது மூன்று முறை தண்ணீர் தெளித்து உடல் வெப்பத்தினை தணிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.
6. உழவர்கள் தங்களுடைய கறவை மாடுகளின் மடியை நன்றாக கழுவி மற்றும் உலர்த்தி பால்கறக்கவும் மேலும் பால் கறந்த பின்பு தூசி அதிகமுள்ள உலர்தீவனம் அளிப்பதை தவிர்ப்பதன் மூலம் மடிவீக்க நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**

**முக்கிய பயிர்கள்:** நெல், கரும்பு மற்றும் வேர்க்கடலை

1. நெற்பயிரில் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அப்பயிறுக்கு மோனோகுரோடோப்பாஸ் அல்லது குயினால்பாஸ் அல்லது புரபோனாப்பாஸ் என்ற மருந்தை ஒரு எக்டேர்ருக்கு ஒரு லிட்டர் என்ற அளவில் தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
2. உழவர்கள் தற்போது உள்ள மண்ணின் ஈரத்தை பயன்படுத்தி கோடை உழவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். இதன் மூலம் மண் வளத்தை அதிகப்படுத்தலாம்.
3. காய்கறி பயிர்களின் உறுஞ்சும் பூச்சிகளின் தாக்கம் காணப்பட்டால் 5 சதவித அளவு வேப்பங் கொட்டை கரைசலை தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்
4. தோட்ட பயிர்களின் வேர் பகுதிகளில் தேங்காய் நார் கொண்டு மூடுவதன் மூலம் மண்ணின் ஈரத்தன்மையை பாதுகாக்கலாம்.